M. VENKATESAN M.A., M.Phil., B.Ed., PG ASSISSTANT ( HISTORY ) GBHSS AYAPPAKKAM.

மார்ச் - 2025 பொதுத்தேர்வு

+1 வரலாறு

நேரம் : 3 மணி மொத்த மதிப்பெண்கள் : 90

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 x 1 = 20

| A | B |
|---|---|
| 1. ஈ. வசுபந்து. | 1. இ. ஔரங்கசீப். |
| 2. இ. ஔரங்கசீப். | 2. அ. கொற்கை. |
| 3. ஆ. மொராக்கோ. | 3. ஈ. கானிங். |
| 4. ஈ. 1863. | 4. அ. அவந்தி. |
| 5. அ. கொற்கை. | 5. ஈ. 1863. |
| 6. இ. iv. | 6. இ. ராபர்ட் கிளைவ். |
| 7. ஈ. கானிங். | 7. இ. 1761. |
| 8. ஆ. அரிக்கமேடு. | 8. ஆ. மொராக்கோ. |
| 9. அ. அவந்தி. | 9. இ. யுவான்சுவாங். |
| 10. அ. சிம்மாச்சலம். | 10. ஆ. கூற்று சரி ; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். |
| 11. ஆ. iv, iii, i, ii. | 11. ஈ. வசுபந்து. |
| 12. ஆ. i, ii. | 12. ஈ. ஜேம்ஸ் பிரின்செப். |
| 13. இ. யுவான்சுவாங். | 13. அ. சிம்மாச்சலம். |
| 14. இ. 1761. | 14. ஈ. தயானந்த சரஸ்வதி. |
| 15. இ. ராபர்ட் கிளைவ். | 15. அ. சாரநாத். |
| 16. ஈ. தயானந்த சரஸ்வதி. | 16. அ. தூத்துக்குடி. |
| 17. ஈ. ஜேம்ஸ் பிரின்செப். | 17. ஆ. iv, iii, i, ii. |
| 18. அ. தூத்துக்குடி. | 18. ஆ. அரிக்கமேடு. |
| 19. அ. சாரநாத். | 19. ஆ. i, ii. |
| 20. ஆ. கூற்று சரி ; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். | 20. இ. iv. |

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 30 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 x 2 = 14

**21.** . ஹோமினின் குறித்து சிறு குறிப்பு வரைக. ( 2 குறிப்புகள் )

- தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தைக் கொண்டிருந்த மனித மூதாதையரே ஹோமினின்.
- இவர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் ஆப்பிரிக்காவில் அதிகளவில் காணப்படுகின்றன.
- இந்தியாவில் ஹோமினின் புதைபடிவம் ஹத்னோராவில் கண்டுபிடிக்கப்பட்டது.

**22.** தொடக்க வேதகாலத்தில் பெண்களின் நிலையைக் கோடிட்டுக் காட்டுக. ( 2 குறிப்புகள் )

- பெண்கள் சமூகத்தில் மரியாதைக்குரிய இடத்தை வகித்தனர்.
- வேள்விகளில் பங்கெடுத்தனர்.
- மறுமணம் பழக்கத்தில் இருந்துள்ளது.

**23.** நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபிடகங்களை எழுதுக.

- வினய பிடகம்.
- சுத்த பிடகம்.
- அபிதம்ம பிடகம் :

**24.** எதன் காரணமாக மகா அலெக்சாண்டர், போரஸின் அரியணையைத் திருப்பித் தந்தார்? ( 2 குறிப்புகள் )

- ஹைடாஸ்பெஸ் போரில் அலெக்சாண்டரிடம் தோல்வியுற்ற போரஸ் சிறைப்பிடிக்கப்பட்டார்.
- பின்னர், போரஸின் கண்ணியத்தால் அலெக்சாண்டர் ஈர்க்கப்பட்டார்.
- <u>தனது மேலாதிக்கத்தை ஏற்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அரியணையைத் திருப்பித்தந்தார்.</u>

www.Padasalai.Net

**25.** தக்கோலப் போரின் முக்கியத்துவம் குறித்துக் கூறுக. ( 2 குறிப்புகள் )
- இராஷ்டிரக்கூடர்களுக்கும் சோழர்களுக்கும் இடையே இப்போர் நடைபெற்றது.
- இப்போரில் சோழ மன்னர் ராசாதித்யன் தோற்கடிக்கப்பட்டார்.
- வெற்றி பெற்ற இராஷ்டிரக்கூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணர் ராமேஸ்வரம் வரை முன்னேறினார்.

26. தராப் பற்றி எழுதுக. ( 2 குறிப்புகள் )
- அலாவுதீன் ஹசன் பாமன்ஷா தன் ஆட்சிப் பகுதியை நான்கு பிரிவுகளாகப் பிரித்தார்.
- அவை : குல்பர்கா, தௌலதாபாத், பீடார், பெரார்.
- அப்பகுதிகள் தராப்ஸ் எனப்பட்டன.

27. முகலாயர் காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி பற்றி எழுதுக. ( 2 குறிப்புகள் )
- தமிழ் இலக்கியப் பரப்பில் சைவ, வைணவ இலக்கியங்கள் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தன.
- குமரகுருபரர், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நீதிநெறிவிளக்கம் ஆகிய முக்கிய இலக்கியங்களை இயற்றினார்.
- தாயுமானவர் சமரச சன்மார்க்கம் எனும் பக்திப்பாடல்களை இயற்றினார்.
- ராபர்ட் டி நொபிலி, வீரமாமுனிவர் ஆகியோர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்தனர்.

28. சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி ஒரு குறிப்பு வரைக. ( 2 குறிப்புகள் )
- சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டது.
- இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்டது.
- இங்கு பல மொழிகளில் அரிய கையெழுத்துப் பிரதிகள் மற்றும் புத்தகங்கள் உள்ளன.
- பிரெஞ்சு-மராத்தியர் இடையே நடந்த கடிதப்போக்குவரத்து இங்கு ஆவணங்களாக பாதுகாக்கப்பட்டுள்ளன.

29. 'சுத்தி' (சுத்திகரிப்பு) இயக்கம் ஏன் ஒரு மீட்டெடுப்பு இயக்கமாகக் கருதப்படுகிறது? ( 2 குறிப்புகள் )
- சுத்தி இயக்கம் இந்துக்கள் அல்லாதோரை இந்துக்களாக மாற்ற முயன்றது.
- எனவே சுத்தி இயக்கத்திற்கு பெரும் எதிர்ப்புகள் தோன்றின.
- எதிர்ப்புகளை மீறி இந்து சமயத்திற்குள் மற்றவர்களை மீண்டும் கொண்டு வந்ததால் இது ஒரு மீட்டெடுப்பு இயக்கமாக கருதப்படுகிறது.

**30.** உத்திரமேரூர் கல்வெட்டு பற்றி சிறு குறிப்பு வரைக. ( 2 குறிப்புகள் )
- இக்கல்வெட்டு முதலாம் பராந்தகனால் வெளியிடப்பட்டது.
- உத்திரமேரூரில் கிடைத்த இரு கல்வெட்டுக் குறிப்புகள் மூலம் சோழர் கால உள்ளாட்சித் தேர்தல் முறையை அறிய முடிகிறது.
- அதன்படி, கிராமம் 30 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.
- ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- போட்டியிடக்கூடிய அனைவருடைய பெயர்களும் தனித்தனிப் பனையோலைகளில் எழுதப்பட்டு, அவை ஒரு பானையில் இடப்படும்.
- சபையில் வயதில் மூத்தவர் ஒரு சிறுவனை அழைத்து, பானையிலிருந்து ஓர் ஓலையை எடுக்கும்படி கூறுவார்.
- அந்தச் சிறுவன் எடுக்கும் ஓலையில் உள்ள பெயருக்குரியவரே உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர் ஆவார்.

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும். **7 x 3 = 21**

**31.** அச்சூலியன் சோகானியக் கருவித் தொழில்நுட்பம் குறித்து எழுதுக. ( 3 குறிப்புகள் )

<u>அச்சூலியன் மரபு:</u>
- கைக்கோடரி வகைக்கருவிகள் அச்சூலியன் மரபு ஆகும்.
- இது பெருமளவில் கோடரிகளையும் வெட்டுக்கத்திகளையும் கொண்டது.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

M. VENKATESAN M.A., M.Phil., B.Ed., PG ASSISSTANT ( HISTORY ) GBHSS AYAPPAKKAM.

சோகனிய மரபு :

- கூழாங்கல்லைச் செதுக்கி உருவாக்கப்படும் கருவிகள் சோகனியன் மரபு ஆகும்.
- சோகனிய மரபு துண்டாக்கும் கருவிகளை சார்ந்தது ஆகும்.

32. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க. ( 3 குறிப்புகள் )

- கால்நடை மேய்ச்சல் வாழ்க்கைமுறை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.
- கால்நடைகளை மையப்படுத்திய மோதல்கள் அன்றாடம் நடந்தன.
- கால்நடை மேய்ச்சலுக்கு அடுத்த நிலையில் வேளாண்மை முக்கிய இடம் வகித்தது.
- வர்ணக் கோட்பாடு இருந்த போதிலும் பொதுவாகச் சமூகத்தில் பாகுபாடுகள் ஆழமாக வேரூன்றவில்லை.

33. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக. ( 3 குறிப்புகள் )

- காடுகளைத் திருத்துவதில் இரும்பு முக்கியப் பங்காற்றியது.
- இரும்புக் கலப்பைகளின் பயன்பாடு வேளாண் உற்பத்தியை மேம்படுத்தின.
- கைவினைப்பொருள் உற்பத்தி அதிகரித்ததில் இரும்புத் தொழில்நுட்பம் மிக முக்கியப் பங்காற்றியது.
- இறுதியில் இது நகரமயமாக்கத்துக்கு வழிவகுத்தது.

34. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்.

| திணை | சார்ந்த நிலம் | தொழில் |
|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடம் | வேட்டையாடுதல், உணவு சேகரித்தல். |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடம். | கால்நடை மேய்த்தல், மாற்றிட வேளாண்மை |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடம். | வேளாண்மை செய்வது தொழிலாகும். |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடம். | மீன்பிடித்தல், உப்பு உற்பத்தி. |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடம். | கால்நடைத் திருட்டு, கொள்ளையடித்தல். |

35. குப்தப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகளைக் கூறுக. ( 3 குறிப்புகள் )

- குப்தப் பேரரசு ‘தேசம்’ அல்லது ‘புக்தி’ எனப்படும் மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.
- மாநிலங்கள் விஷ்யா என்ற மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன.
- மாவட்டத்திற்குக் கீழ் விதி, பூமி, பதகா, பீடா என்று பல்வேறு விதமான நிர்வாக அலகுகள் இருந்தன.
- கிராம மட்டத்தில் கிராமிகா, கிராம் அத்யக்ஷா போன்ற அதிகாரிகள் இருந்துள்ளனர்.

36. இரஸியா சுல்தானா அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டது ஏன்? ( 3 குறிப்புகள் )

- ஆண்களைப் போன்று ஆயுதங்களுடன் குதிரை சவாரி மேற்கொண்டார்.
- தனது முகத்திற்கு அவர் திரையிடவில்லை.
- அபிசீனிய அடிமையை குதிரைப்படைத் தலைவராக நியமித்தார்.
- ரசியாவுக்கும் அபிசீனிய அடிமைக்கும் இருந்த நெருக்கத்தை பிரபுக்கள் விரும்பவில்லை.

37. ராக்சஷி தங்கடி போர் (1565) பற்றி சிறு குறிப்பு வரைக. ( 3 குறிப்புகள் )

- தக்காண சுல்தான்களுக்கும் விஜய நகரப் பேரரசிற்கும் இடையே இப்போர் நடைப்பெற்றது.
- விஜய நகரப் படைகளுக்கு ராமராஜர் தலைமை தாங்கினார்.
- போரில் விஜய நகரம் தோற்கடிக்கப்பட்டது. ராமராஜர் கொல்லப்பட்டார்.
- வெற்றிப் பெற்ற பாமினிப் படைகள் முதன் முதலாக விஜய நகருக்குள் நுழைந்தன.

www.Padasalai.Net

38. முகலாயர் ஆட்சியில் நிறுவப்பட்ட ஐரோப்பியக் குடியேற்றங்கள். ( 3 குறிப்புகள் )

| | |
|---|---|
| போர்த்துகீசியர் | டாமன், சால்செட், பம்பாய் சாந்தோம், வங்காளத்தில் ஹுக்ளி |
| டச்சுக்காரர் | மசூலிப்பட்டினம், பழவேற்காடு, சூரத், காரைக்கால், சின்சுரா, காசிம்பஜார், பாராநகர், பாட்னா, பாலசோர், நாகப்பட்டினம் |
| டேனியர் | தரங்கம்பாடி, செராம்பூர் |
| பிரெஞ்சுக்காரர் | சூரத் , மசூலிப்பட்டினம், புதுச்சேரி, மாஹி, ஏனாம், காரைக்கால் |
| ஆங்கிலேயர் | சூரத், சென்னை, பம்பாய், கல்கத்தா |

39. வீரபாண்டிய கட்டபொம்மன் பற்றி சிறு குறிப்பு வரைக. ( 3 குறிப்புகள் )

- பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரர் ஆவார்.
- வரி செலுத்துவது தொடர்பாக கட்டபொம்மனுக்கும் பிரிட்டிசாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.
- கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனுடன் மோதல் போக்கை கையாண்டதால் பணி நீக்கம் செய்யபட்டார்.
- எனினும் கட்டபொம்மன் தான் பட்ட அவமானத்தினை மறக்கவில்லை.
- எனவே தென்னிந்திய கூட்டணியுடன் அவர் இணையும் முயற்சியில் ஈடுபட்டார்.
- எனவே கம்பெனி இதனை சவாலாக ஏற்று கட்டபொம்மனுக்கு எதிராக படையெடுப்பை மேற்கொண்டது.
- பானர்மேன் தலைமையிலான ஆங்கில படை கட்டபொம்மனை தோற்கடித்தது.
- புதுக்கோட்டை மன்னர் விஜய ரகுநாத தொண்டைமான் களப்பூர் காட்டிலிருந்த கட்டபொம்மனைப் பிடித்து, ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார்.
- 1799 அக்டோபர் 16 ஆம் நாளில் கட்டபொம்மன் கயத்தாறு பழைய கோட்டைக்கு அருகில் தூக்கிலிடப்பட்டார்.

40. அயோத்திதாச பண்டிதர் ( 3 குறிப்புகள் )

- ஆதிதிராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்று வாதிட்டார்.
- மக்கள் பௌத்த மதத்திற்கு மாறுவதை ஊக்குவித்தார்.
- இவரது கொள்கைகளை வட தமிழகத்தில் அதிகமானோர் பின்பற்றினர்.
- "ஒரு பைசாத் தமிழன்" என்ற வாரப்பத்திரிகையை நடத்தினார்.

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ பற்றி எழுதுக. ( 5 குறிப்புகள் )

ஹரப்பா :

- ஹரப்பாமக்கள் கட்டுமானத்துக்குச் சுட்ட, சுடாத செங்கற்களையும் கற்களையும் பயன்படுத்தினர்.
- நகரங்கள் சட்டக வடிமைப்பைக் கொண்டிருந்தன.
- கழிவுநீர் வடிகால்கள் சரியான ஒழுங்குடன் கட்டப்பட்டன.
- வீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களைக் கொண்டிருந்தன.

மொகஞ்சதாரோ :

- மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம்.
- அது கோட்டைப் பகுதி, தாழ்வான நகரம் என இரு வேறுபட்ட பகுதிகளைக் கொண்டிருந்தது.
- வீடுகளில் மேல்தளம் இருந்ததை உணர்த்தும் வகையில் சில வீடுகள் படிக்கட்டுகளைக் கொண்டுள்ளன.
- பல வீடுகளில் சுற்றிலும் அறைகளுடன் கூடிய முற்றம் அமைந்திருந்தது.

ஆ) புத்தரின் எண் வழிப்பாதையை விவரி.

- நன்னம்பிக்கை : நான்கு உயர் உண்மைகளை புரிந்து கொள்ள வேண்டும்.
- நல்லார்வம்; பொருளாசை மற்றும் தீய எண்ணத்தை கைவிட வேண்டும்.
- நல்வாய்மை : உண்மையை பேச வேண்டும்.
- நற்செயல் : நடுநிலையோடு கடமையை நிறைவேற்றுதல்.
- நல்வாழ்க்கைமுறை : நேர்மையான வருமானம்.
- நன்முயற்சி : நல்ல உணர்வுகளையும் முயற்சிகளையும் வளர்த்தல்.
- நற்சிந்தனை : எண்ணம், சொல், செயலில் தூய்மையாக இருக்க வேண்டும்.
- நல்லதியானம் : தியானம் மற்றும் ஆன்மீகத்தில் கவனம் செலுத்துதல்.

www.Padasalai.Net

42. அ) மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகளைப் பற்றி விளக்கவும். ( 5 குறிப்புகள் )

- மௌரிய அரசர்கள் பற்றி பௌத்த, சமண இலக்கியங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.
- இலங்கையில் கிடைத்த பாலி நூலான மகாவம்சம் கூடுதல் ஆதாரமாகும்.
- ருத்ரதாமனின் ஜுனாகத் பாறை கல்வெட்டு மௌரிய பேரரசின் எல்லைகள் பற்றி அறிய உதவுகிறது.
- விசாகதத்தரின் முத்ராராட்சசம் என்ற நாடகம் மகத அரியணையில் சந்திரகுப்தர் அமர்ந்ததைப் பற்றி கூறுகிறது.
- சந்திரகுப்தர் பற்றி அறிய உதவும் முக்கியமான நூல் இண்டிகா ஆகும்.
- மௌரியரின் நிர்வாகம், அரசியல், பற்றி விரிவான பதிவுகள் அர்த்தசாஸ்திரத்தில் உள்ளது.
- அசோகரால் வெளியிடப்பட்ட 14 பாறை கல்வெட்டுள், 2 கலிங்க கல்வெட்டுகள், 7 தூண் கல்வெட்டுகள், சில சிறு பாறை கல்வெட்டுகள், என மொத்தம் 33 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.
- அசோகரின் கல்வெட்டுகள் கலிங்கப்போர் பற்றியும் அவரது தர்மக் கோட்பாடு பற்றியும் விவரிக்கிறது.

ஆ) கலைக்கும் இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும். ( 5 குறிப்புகள் )

- சிலை வடிப்புக்கலையில் இந்திய-கிரேக்கக் கூறுகள் ஒன்றிணைந்து காந்தாரக்கலை உருவானது.
- இது இந்தோ- கிரேக்க பாணியிலான சிற்பங்களும் கலையும் தோன்றுவதற்கு வழிவகுத்தது.
- தட்சசீலத்திலும், வட-மேற்குப் பகுதிகளிலும் புத்தரின் சிலைகள் செதுக்கப்பட்டன.
- மதுரா அருகே செம்மணற் கல்லில் நுட்பமாக பல சிற்பங்கள் செதுக்கப்பட்டன.
- அஜந்தா முதல் கன்ஹேரி வரை பாறைகளைக் குடைந்து விகாரங்களையும், சைத்தியங்களையும் அமைத்தனர்.
- மஹாயான மரபின் ஒரு பகுதியாக இந்தக் குகைகளில் புத்தரின் பெரிய அளவு சிலைகள் செதுக்கப்பட்டன.
- நாகார்ஜுனர் அஸ்வகோஷர், பார்ஸ்வர், வசுமித்திரர், போன்றோரை கனிஷ்கர் ஆதரித்தார்.
- அஸ்வகோஷர், அவரது புத்தசரிதம் என்ற நூலை இயற்றினார்.
- மாபெரும் நாடகாசிரியர் பாசன், பெரும்பாலும் இந்தக்காலத்தைச் சேர்ந்தவராவார்.

43. அ) குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்". விவாதிக்கவும் ( 5 குறிப்புகள் )

- குப்த அரசுதான் துணைக்கண்டத்தின் பெரிய பகுதியை அரசியல் ரீதியாக ஒன்றிணைத்தது.
- வணிகக்குழு முறை, கடல்கடந்தவாணிபம் ஆகியவற்றுடன் அதன் பொருளாதாரம் எழுச்சி கண்டது.
- இக்காலகட்டத்தில் சமஸ்கிருதத்தில் பல பெரிய படைப்புகள் தோன்றின.
- நுண்கலை, சிற்பம், கட்டிடக்கலைஆகியவற்றில் பண்பாட்டு முதிர்ச்சி காணப்பட்டது
- உயர் வர்க்கத்தினரின் வாழ்க்கைமுறை உச்சத்தில் இருந்தது.
- கல்வி, கலை, அறிவியல் ஆகியவை சிறந்தோங்கி இருந்தது.
- இக்காலகட்டத்தில் நிலப்பிரபுத்துவம் ஒரு நிறுவனமாக வேரூன்றத் தொடங்கியது.
- நிலப்பிரபுத்துவம் காரணமாக மக்கள் துன்புற்றார்கள்.
- எனவே 'குப்தர் காலம் பொற்காலம்' என்பதை விட, பண்பாட்டு மலர்ச்சி, செவ்வியல் கலைகளின் காலம் என்பதே பொருத்தமாக இருக்கும்.

ஆ) மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக. ( 5 குறிப்புகள் )

- மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்கள் முதலாம் ராஜசிம்மன் ஆட்சிக்காலத்தில் எழுப்பியதாகும்.
- இக்கோவில் மூன்று கருவறைகளைக் கொண்டது.
- இம்மூன்றில் சிவன், விஷ்ணு கடவுள்களின் கருவறை முக்கியமானதாகும்.
- ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் இக்கோவில்களின் சிறப்பம்சமாகும்.
- இங்குள்ள ஒற்றைக்கல் ரதங்கள் பஞ்சப்பாண்டவர் ரதங்கள் என்று அறியப்படுகின்றன.
- பஞ்சப்பாண்டவர் ரதங்களில் மிக நேர்த்தியானது தர்மராஜா ரதமாகும்.
- பீம ரதம் செவ்வக வடிவ அடித்தளத்தையும் அழகான சிற்பங்களையும் கொண்டுள்ளது.
- கங்கை நதி ஆகாயத்திலிருந்து இறங்கி வரும் சிற்பம் சிறந்த கலை வெளிப்பாடு ஆகும்.
- கிருஷ்ண மண்டபச் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ள பசுக் கூட்டங்கள் போன்ற கிராமத்து காட்சிகள் கலை அதிசயமாகும்.

44. அ) சோழர் காலக் கட்டுமானக் கலையின் சிறப்புகளை எழுதுக. ( 5 குறிப்புகள் )

- தஞ்சாவூர் பெரிய கோவில் கட்டடக்கலை, ஓவியம், சிற்பம், ஆகிய கலைகளுக்கு சிறந்த சான்றாக உள்ளது.
- இக்கோவிலின் கருவறை மீது அமைக்கப்பட்ட விமானம் 190 அடி ஆகும்.
- இது 80டன் எடை கொண்ட மூடிய அமைப்பைக் கொண்டுள்ளது.
- கருவறையின் வெளிச்சுவர்களில் இலட்சுமி, விஷ்ணு, அர்த்தநாரீசுவரர், பொறிக்கப்பட்டுள்ளது.
- புராணங்களிலும் காவியங்களிலும் காணப்படும் காட்சிகள் சுவரோவியங்களாகவும் குறும் சிற்பங்களாகவும் இக்கோவில் சுவர்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- இராஜேந்திர சோழன் கங்கைகொண்டசோழபுரத்தில் ஒரு கோவிலைக் கட்டினார்.
- இக்கோவிலின் கருவறையின் வெளியே துர்கா, விஷ்ணு, சூரியன், ஆகிய கடவுளரின் சிலைகள் வடிக்கப்பட்டுள்ளன..
- இரண்டாம் இராஜராஜனால் கட்டப்பட்ட தாராசுரம் கோவில் சோழர் காலக் கட்டுமானக் கலைக்கு மற்றொரு சிறந்த உதாரணம் ஆகும்.
- இக்கோவிலின் கருவறைச் சுவரின் தளத்தில் ‘பெரிய புராண’ நிகழ்வுகள் குறுஞ்சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

ஆ) விஜயநகர ஆட்சியாளர்களின் ஆட்சிமுறை பற்றி விவரி. ( 5 குறிப்புகள் )

- அரசரே அனைத்து அதிகாரங்களையும் பெற்றவராவார்.
- முதலமைச்சர் மகாபிரதானி என்றழைக்கப்பட்டார் .
- தளவாய், வாசல், ராயசம், அடைப்பம், காரிய கர்த்தா போன்ற அதிகாரிகளுக்கு இவரே தலைமையாவார்.
- நாடு ராஜ்யா என்னும் மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, பிரதானி (ஆளுநர்) நியமிக்கப்பட்டார்.
- புதிய பகுதிகள் கைப்பற்றப்பட்டு இணைக்கப்பட்ட போது புதிய ராஜ்யாக்கள் உருவாயின.
- ராஜ்யாக்கள் சீமை, ஸ்தலம், கம்பனா எனும் சிறிய நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன.
- மிகச்சிறிய நிர்வாக அலகு கிராமமாகும்.
- நாயக்முறை அறிமுகமான போது ராஜ்யாக்கள் தங்களது முக்கியத்துவத்தை இழந்தன.

45. அ) தென் தமிழகத்தில் பாளையக்காரர் அமைப்பு முறை பற்றி விவரிக்கவும். ( 5 குறிப்புகள் )

- விஸ்வநாத நாயக்கரின் தளவாய் அரியநாயக முதலியாரின் வழிகாட்டுதலின் படி சிற்றரசுகள் வகைப்படுத்தப்பட்டு, 72 பாளையங்களாக மாற்றப்பட்டன.
- பாளையக்காரர் அரசருக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையைக் கப்பமாகச் செலுத்த வேண்டும்.
- தேவையான போது படைவீரர்களை அனுப்புவதற்கும் பாளையத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் கடமைப்பட்டவர்.
- பாளையக்காரர் நிதியாதாரத்தைப் பெற சில கிராமங்கள் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன.
- குடிமையியல், குற்றவியல் பிரச்னைகளில் விசாரணை நடத்தி நீதி வழங்கும் அதிகாரம் அவருக்கு உண்டு.
- பாளையங்களை பூகோளரீதியாக மேற்குப் பாளையங்கள், கிழக்குப் பாளையங்கள் எனப் பிரிக்கலாம்.
- மேற்குப் பகுதியில்மறவர் பாளையங்கள் அமைந்திருந்தன.
- கிழக்குப் பகுதியில் தெலுங்கு பேசுவோர் குடியேறியிருந்தார்கள்.

ஆ) இந்தியாவில் போர்த்துகீசியரின் வருகையினால் ஏற்பட்ட தாக்கத்தை விவரி. ( 5 குறிப்புகள் )

- ஐரோப்பியர் இந்திய அரசர்களை வென்று அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றினர்.
- போர்த்துகீசியரால் அராபியரின் வணிக முற்றுரிமையைக் கட்டுப்படுத்த முடிந்தது.
- இயேசு சபையைச் சார்ந்த சமயப்பரப்பாளர்கள் இந்தியா வந்தனர்.
- ஐரோப்பியர் இந்தியர் இடையிலான திருமண ஊக்குவிபின் விளைவாக ஒரு புதிய யூரேசிய இனக்குழு உருவானது.
- இவர்கள் பின்னாளில் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலுமிருந்த போர்த்துகீசியரின் காலனிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
- மயிலாப்பூர் போர்த்துகீசியர்களால் கருப்பர் நகரம் என்று அழைக்கப்பட்டது.
- போர்த்துகீசியருக்கும் கீழைக் கடற்கரையைச் சார்ந்த முஸ்லீம் குழுக்களுக்கும் இடையே மோதல்கள் நடந்தன.
- ஆயிரக்கணக்கான பரதவ குல மக்கள் கத்தோலிக்கக் கிறித்தவ மதத்திற்கு மாறினர்.

www.Padasalai.Net

M. VENKATESAN M.A., M.Phil., B.Ed., PG ASSISSTANT ( HISTORY ) GBHSS AYAPPAKKAM.

46. அ) டல்ஹௌசி பிரபுவின் வாரிசு உரிமை இழப்புக் கொள்கை பற்றி எழுதுக. ( 5 குறிப்புகள் )

- இந்து சம்பிரதாயங்களின்படி, வாரிசில்லாத மன்னர் ஓர் ஆண் குழந்தையை தத்தெடுக்க முடியும்.
- டல்ஹௌசியின் வரவுக்கு முன்புவரை கம்பெனி அரசின் அனுமதியை சுவீகாரத்திற்கு முன்போ, பின்போ அரச குடும்பத்தினர் பெற்று வந்தனர்.
- ஆனால் பிரிட்டிஷ் அரசுக்கு கட்டுப்பட்ட சிற்றரசுகள் உரிய அனுமதியின்றி அவ்வாறு வாரிசை நியமிக்க முடியாது என்று டல்ஹவுசி வாதிட்டார்.
- இதன்படி தத்தெடுக்கப்பட்ட வாரிசுகள் அரியணை ஏறுவது தடுக்கப்பட்டது.
- இதனால் பாதிக்கப்பட்ட முதல் அரசு சதாரா ஆகும்.
- இதனைத் தொடர்ந்து ஜான்சி, நாக்பூர் ஆகியன பிரிட்டிஷ் அரசுடன் இணைக்கப்பட்டன.
- வாரிசு உரிமை இழப்புக் கொள்கை நாடு பிடிக்கும் உத்தியாகச் செயல் வடிவம் பெற்றது.
- எனினும் பிரிட்டிஷ் முடியரசு இந்திய நாட்டின் பொறுப்பை ஏற்றபின் இக்கொள்கை திரும்பபெறப்பட்டது.

47. அ) 1801ம் ஆண்டு கிளர்ச்சி பற்றி விரிவாக எழுதுக. ( 5 குறிப்புகள் )

- திப்புவையும் கட்டபொம்மனையும் வென்ற பின்னர் ஆங்கிலேய படைகள் ராமநாதபுரத்திலும், சிவகங்கையிலும் கிளர்சியாலார்களை எதிர்கொண்டனர்.
- புதுக்கோட்டை தொண்டைமானும் ஆங்கிலேயருடன் இணைந்திருந்தார்.
- ஆங்கிலேயரின் பிரித்தாளும் ராஜதந்திரம் அரசரின் ஆதரவாளரிடையே பிரிவினையை ஏற்படுத்தி கிளர்ச்சியாளர்களை மனந்தளர செய்தது.
- அக்னியு தலைமயிலான பிரிட்டிஷ் படைகள் கிளர்ச்சியாளர்களிடமிருந்து பரமக்குடி அரண்களை ஆக்கிரமித்தது.
- மருது சகோதரர்கள் மற்றும் கிளர்ச்சியாளர்கள் ஆங்கிலேயருக்கு கடுமையான எதிர்ப்பினை காட்டினர்.
- இரு தரப்பிலும் பெரும் சேதம் ஏற்பட்டது.
- இருப்பினும் ஆங்கிலேயரின் படைவலிமையும், தளபதிகளின் திறைமையும் அவர்களின் வெற்றிக்கு வழிவகுத்தது.
- மருது சகோதரர்கள், ஊமைத்துரை, செவத்தையா மற்றும் கிளர்ச்சியாளர்கள் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டனர்.

ஆ) மராட்டியர் ஆட்சிக் காலத்தில் நடந்த ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளைக் காலக்கோட்டில் வரைந்து எழுதவும்.

1627 – சிவாஜி பிறப்பு.
1646 - சிவாஜி தோர்ணா கோட்டையை கைப்பற்றுதல்.
1659 - சிவாஜி அப்சல்கானை கொல்லல்.
1663 - சிவாஜி செயிஷ்டகானை தோற்கடித்தல்.
1664 - சிவாஜி சூரத் நகரை தாக்குதல்
1665 - புரந்தர் உடன்படிக்கை.
1666 - சிவாஜி ஆக்ரா செல்லல்.
1670 - சிவாஜி சூரத் நகரை மீண்டும் தாக்குதல்
1674 - சிவாஜி சத்ரபதியாக முடிசூட்டுதல்.
1680 - சிவாஜி மரணம்.
1775 - முதல் ஆங்கில மராத்தியப் போர் தொடக்கம்.
1782 - முதல் ஆங்கில மராத்தியப் போர் முடிவு, சால்பை உடன்படிக்கை.
1802 - பசின் உடன்படிக்கை,
1803 - இரண்டாம் ஆங்கில மராத்தியப் போர் தொடக்கம்.
1806 - இரண்டாம் ஆங்கில மராத்தியப் போர் முடிவு.
1817 - பூனா ஒப்பந்தம், மூன்றாம் ஆங்கில மராத்தியப் போர் தொடக்கம்.
1818 - மூன்றாம் ஆங்கில மராத்தியப் போர் முடிவு.


www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



46) b. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வரும் ஐரோப்பிய வணிகத் தளங்களை குறிக்கவும்.

1. சென்னை, 2. கல்கத்தா, 3. மும்பை, 4. கோவா, 5. கள்ளிக்கோட்டை.




Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com